**சுருக்கம்**

குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – தென் மண்டலம் – உக்கடம் மீன் சந்தையினை மீன் வளத்துறையின் மூலம் கட்டி செயல்படுத்துதல் மற்றும் நீண்டகால குத்தகை அடிப்படையில் மீன்வளத்துறைக்கு ஒதுக்கி, வாடகை நிர்ணயம் செய்தல் – அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசாணை(நிலை) எண். 228** **நாள்: 23.11..2009**

**படிக்கப்பட்டது :**

1. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் கடித எண். 1322 / 09 / 1 (தெ) நாள் 25.02.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.11348 / 09 /ஆர்–2(1), நாள்07.10.2009 மற்றும் 03.11.2009.

–––––

**<u>ஆணை:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது 07.10.2009ஆம் நாளிட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 54வது வார்டில் 1.2168 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட உக்கடம் மீன் விற்பனை சந்தையினை உலக சுகாதார தரத்திற்கு உயர்த்தி மீன் விற்பனை செய்வதற்கு தேசிய மீன் வளத்துறையின் மூலம் வடிவமைத்து, கட்டி, செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்படி இடத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் மேற்படி துறைக்கு ஒதுக்கவும் வாடகை நிர்ணயம் செய்யவும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரிடம் இருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண் 361, நாள் 19.02.2009–ல் மேற்படி இடத்தை மீன் வளத்துறைக்கு ஒதுக்கவும் வாடகை நிர்ணயம் செய்யவும் காலக்கெடு நிர்ணயிக்கவும் அரசிற்கு பிரேரணை அனுப்பலாம் எனத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மேற்படி இடத்தில் 20” X 20 “ என்ற அளவில் 46 திறந்த வெளிக் (open stalls) கடைகள் கட்டவும் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த 5 ஆண்டுகளாக மேற்படி இடத்தினை குத்தகைக்கு விட்டதில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ரூ.2.75இலட்சம் வருமானம் கிடைக்கின்றது என்றும், அவர் தெரிவித்துள்ளார். மேற்படி இடத்திற்கு பொதுப்பணித்துறையால் மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5/– வீதம் ரூ.3,41,511/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், இத்தொகை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள தடையாக உள்ளது என்றும் மேற்படி மீன் வளர்ச்சிக் கழகம் ரூ.1.96கோடி உத்தேச மதிப்பீட்டில் உக்கடம் பகுதியிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான மேற்படி மீன் சந்தையில் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் அடிப்படையில் (DBOT) கோயம்புத்தூர் மாநகராட்சி மீன் அங்காடியை நவீனமயமாக்கும் பணிகளை எடுத்துக் கொள்வதை கருத்தில் கொண்டும், மேலும் மீன் வளர்ச்சிக் கழகம் அரசு சார்பு நிறுவனமாக இருப்பதாலும், கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களுக்கு மிக உயர்ந்த தரத்தில் மீன்

உணவுகள் கிடைப்பதாலும் இதனை, சிறப்பினமாகக் கருதி ஆண்டு ஒன்றுக்கு ரூ.3இலட்சம் வீதம் 20 ஆண்டுகளுக்கும், ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை 10% உயர்த்தப்பட வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் மீன் வளர்ச்சித் துறைக்கு வழங்கலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். இதற்கு, கோயம்புத்தூர் மாநகராட்சி இப்பொருள் தொடர்பாக தனது தீர்மான எண்.107/2009 நாள் 30.10.2009–ல் ஒப்புதலளித்துள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. அரசு, நகராட்சி நிர்வாக இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட மேற்படி கருத்துருவை ஆய்வு செய்தபின் உக்கடம் மீன் விற்பனை சந்தையினை உலகத் தரத்திற்கு உயர்த்தும் வகையில் ரூ.1.96கோடி மதிப்பீட்டில் கோவை மாநகராட்சி உக்கடம் மீன் அங்காடியை நவீனப்படுத்தி, வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், மற்றும் மாற்றுதல் (Design, Build Operate and Transfer Basis) அடிப்படையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பணியினை மேற்கொள்வதாலும், அது ஒரு அரசு சார்பு நிறுவனமாக இருப்பதாலும், கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களுக்கு மிக உயர்ந்த தரத்தில் மீன் உணவுகள் கிடைப்பதாலும் இதனை, சிறப்பினமாகக் கருதி ஏற்று அவ்விடத்தினை ஆண்டு ஒன்றுக்கு ரூ.3இலட்சம் குத்தகை வீதம் 20 ஆண்டுகளுக்கும், ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை 10% உயர்த்தப்பட வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு குத்தகைக்கு விடலாம் என தீர்மானித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**நிரஞ்சன்மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,
சென்னை–9.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

நகல்
கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை,
சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4&அநமுII) துறை,
சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின்
தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி / நகல்.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**